## பத்திரிக்கை செய்தி

வளர்த்து பேணுதல் வழிகாட்டுதல் 2015-ன்படி, இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற குழந்தைகள் இல்லங்களில் உள்ள தத்துக்கொடுப்பதற்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் இருக்கக்கூடிய குழந்தைகள் மற்றும் பெற்றோர் பராமரிப்பு செய்ய இயலாத நிலையில் குழந்தைகள் இல்லங்களில் தங்கும் குழந்தைகளை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் கண்டறியப்பட்டு, இக்குழந்தைகளுக்கு குடும்பச் சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர் தேவைப்படுகிறது. வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர் - என்பவர் சொந்த குழந்தைகள் இருந்தோ அல்லது தத்து எடுப்பதற்கு உரிய தகுதிகள் இருந்து தத்தெடுப்பிற்கு பதிவு செய்து காத்திருப்போர்களாக இருப்பவர்கள் மற்றும் குழந்தை இல்லாதவர்கள் யார் வேண்டுமானாலும் உரிய நடைமுறைகளை பின்பற்றி வளர்ப்பு பராமரிப்பில் குழந்தைகளை வளர்க்கலாம். வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர் என்ற வகையில் பராமரிப்பு செய்ய தயார் நிலையில் உள்ளவர்கள் நேரடியாக திருவள்ளூர், எண்.13.Dr.அப்துல் கலாம் தெரு, M.D.M. நகர் என்ற முகவரியில் செயல்படும் திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் / உறுப்பினரையோ அல்லது திருவள்ளூர், நெ.48.J.N. சாலை, (சாந்தி கல்யாண மண்டபம் அருகில்) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகினையோ அணுகலாம். வளர்ப்பு பராமரிப்பு காலங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் நிதி உதவி தேவைப்படும் வளர்ப்பு பாரமாரிப்பு பெற்றோருக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2000/- வீதம் உதவித்தொகை வழங்கப்படும். இந்த வளர்ப்பு பராமரிப்பு திட்டத்தில் இருக்கும் குழந்தைகள் குறுகிய காலம் அல்லது நீண்ட காலம் அல்லது குழந்தையின் 18 வயது முடியும் வரை வளர்ப்பு பாரமாரிப்பு பெற்றோருடன் இருக்க அனுமதி வழங்கப்படும். விண்ணப்பம், நிபந்தனைகள், நடைமுறைகளை பெற்றோர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலத்தை நேரில் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு தொலை பேசி எண் 044-27665595).

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
திருவள்ளூர்.

மாவட்ட ஆட்சியர்/தலைவர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
திருவள்ளூர்.